 

# ஆவிகள் மற்றும் கிராம தேவதைகளின் வழிபாடு

சாந்திப்பிரியா

காலம் காலமாக இந்தியாவின் பல கிராமங்களிலும் உள்ள மக்கள் கிராம தேவதை, ஆவிகள் மற்றும் பல்வேறு பூதங்களை வழிபாடு செய்தவண்ணம் இருக்கிறார்கள். கிராம தேவதை, ஆவிகள் மற்றும் பல்வேறு பூதங்களுக்கு தம் மீது உள்ள கோபம் காரணமாக தமது சக்திகளை கொண்டு அவை அதி பயங்கரமான நோய் நொடிகளை பரப்பி, அகால மரணங்களை நிகழ்த்தி, குடும்பங்களின் ஒற்றுமையை சிதைத்து கிராமத்தில் நிம்மதியை அழிக்க முயலும் என மக்கள் நம்பியதினால் அவற்றின் சீற்றங்களை தணிப்பதற்கு அவைகளை ஆராதித்து வழிபடுகிறார்கள். இப்படிப்பட்ட மக்களில் பெரும்பான்மையோர் வேளாண்மை மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்டு

கிராமங்களில் வசிக்கும் சமூகத்தினர் ஆவர். ஆனால் இப்படிப்பட்ட நம்பிக்கைகளின் அடிப்படையில் கிராம தேவதை, ஆவிகள் மற்றும் பூதங்களை வழிபடுவது இந்திய கிராமங்களில் மட்டுமே நடைபெறும் நிகழ்ச்சிகள் அல்ல, இப்படிப்பட்ட நம்பிக்கைகள் வனப் பிரதேசங்களையும், மலைப் பகுதி வாழ் மக்களையும் அதிகம் கொண்டுள்ள ஆப்ரிக்கா போன்ற நாடுகளிலும் உள்ளன என்பதே உண்மை நிலை ஆகும். காலம் காலமாக இருந்து வரும் நம்பிக்கைகளின் அடிப்படையிலான இப்படிப்பட்ட வழிபாட்டு முறை நாகரீகம் அடைந்துள்ள நிலையிலும் இன்னமும் அதே வேகத்துடன் தொடர்ந்து கொண்டு உள்ளன என்பதும் வியப்புக்குறிய செய்தியாகும்.

முன் காலத்தில் கிராமங்களில் இருந்த மக்கள் பல்வேறு காரணங்களினால் ஆவிகள், பூதங்கள் மற்றும் கிராம தேவதை போன்றவை தமது கிராமங்களுக்கு வருகை தருவதாகவும் அந்த தேவதைகள் கீழுள்ளவை என்றும் நம்பினார்கள்:-

- அந்த கிராமங்களில் வாழ்ந்தவர்களின் ஆவிகள்
- அங்கு வசித்து வந்தபோது அகால மரணம் அடைந்தவை
- அந்த கிராமங்களில் அவர்களது நெருங்கிய சொந்த பந்தம் அல்லது விரோதிகள் வசித்து வந்துள்ளனர். ஆகவே தமது அகால மரணத்துக்குக் காரணமான அவர்களில் சிலரை பழி வாங்க அங்கு வருகின்றன
- புராணங்களின் கூற்றின்படி ஒருவர் மரணம் அடைந்து விட்டாலும் மீண்டும் அந்த ஆத்மா மறு பிறப்பு எடுக்கும்வரை தமது நெருங்கிய சுற்றத்தாரைப் பாதுகாக்கவும், தமது பசி மற்றும் தாகத்தை தீர்த்துக் கொள்ளவும் தாம் வாழ்ந்த இடத்தில் வந்து தங்குகின்றன.

இவற்றை எல்லாம் தாண்டி உள்ள நம்பிக்கை என்னவென்றால் நல்ல ஆத்மாக்கள் கிராமங்களில் வந்து தங்கி இருக்கையில் அவை அந்த கிராமத்தின் காவல் தெய்வமாக இருந்து கொண்டு, பூர்வ ஜென்ம பாபங்களின் விளைவாக தீய ஆவிகளாகி வானுலகில் சுற்றித் திரிந்து கொண்டு இருக்கும் ஆவிகள் அந்த

கிராமங்களில் நுழைய முயன்றால் அவற்றை அடித்துத் துரத்துவதுடன், இயற்கையின் சீற்றங்களான புயல், பெரும் மழை மற்றும் வெள்ளங்களினால் ஏற்படும் தாக்கங்கள் போன்றவற்றை தடுத்து நிறுத்துகின்றன என கிராம மக்கள் நம்புகின்றார்கள். அப்படிப்பட்ட நல்ல ஆவிகள் மற்றும் பூதங்களை வழிபட்டு துதிக்காவிடில் அவை கோபம் அடைந்து கிராமத்தில் தீராத நோய் நொடிகளை பரப்பி சொல்லொணா துயரங்களுக்கு தம்மை ஆளாக்கும் எனவும் பயந்தார்கள். இந்த காரணங்களினால் கிராம மக்கள் ஆவிகள் தத்தம் கிராமங்களில் தமக்கு உதவும் என நினைத்த கிராம தெய்வங்களை ஸ்தாபிக்களானார்கள்.

இன்னென்ன பாவங்களுக்கு இன்னென்ன தண்டனை கிடைக்கும் என்றும், தீமைகளை செய்பவர்கள் தீய ஆவிகளாக மாறுவார்கள் எனவும், ஆகவே அவற்றை தடுத்து நிறுத்திக் கொள்ள பல்வேறு தெய்வங்களுக்கு பரிகார பூஜைகளையும், பிரார்தனைகளையும் செய்ய வேண்டும் என்றும் புராணங்களில் கூறப்பட்டு உள்ளன. வேத நியமங்களின்படி தீமைகளை செய்பவர்கள் ராக்ஷஸர்கள் அல்லது அசுரர்களாக பிறந்து தனிமைக் காடுகளில் பசியோடு அலைந்து திரிவார்கள் என்றும், வேறு சிலர் தீய ஆவிகளாக மாறி பசியோடும், தாகத்தோடும் வானில் சுற்றித் திரிவார்கள் என்றும், பல்வேறு செய்திகள் காலம் காலமாக மக்களின் மனதில் ஒரு பய நிலையை தோற்றுவித்ததினால் கிராம மக்கள் தம்மை அப்படிப்பட்ட தீய ஆத்மாக்களிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ள தக்க வழிமுறைகளைத் தேடி அலைந்து கீழ் கண்ட காரியங்களை செய்யத் துவங்கினார்கள்.

- கிராம தேவதைகளை, பூதங்களை, தூய ஆத்மாக்களை ஆராதித்தல்
- ஆத்மாக்கள் அமர்ந்திருந்த பாறைகள், நிழல் தரும் மரங்கள் போன்ற இடங்களை வழிபாட்டுத் தலங்களாக மாற்றி அமைத்து வழிபடுவது
- அப்படி தாம் ஸ்தாபித்த கிராம தேவதைகளுக்கும், ஆத்மாக்களுக்கும் வருடாந்திர பண்டிகைகள் நடத்தி வழிபடுவது

கிராம மக்கள் களிமண்ணால் ஆன ஆண் மற்றும் பெண்களின் சிலைகளை செய்து அவற்றை கிராம எல்லைகளில் வைத்து கிராம தேவதைகளாக வழிபடலானார்கள். அப்படி செய்வதின் மூலம் அவை தமது கிராமத்தை பாதுகாக்கும் என நம்பினார்கள். இப்படிப்பட்ட நிலை கிராமங்களில் இருந்தாலும் தனிப்பட்ட முறையிலும் தமது வீடுகளில் வேறு ஒரு வழிபாட்டு முறையையும் வைத்து இருந்தார்கள். தமது முதியோர்கள் மறு பிறப்பு எடுக்கும்வரை அவர்கள் ஆவிகளாக சுற்றித் திரிவதாக நம்பியதினால் அந்த ஆவிகளை வணங்கித் துதிப்பதின் மூலம் அவர்களது ஆசிகளைப் பெற முடியும் என்றும், அதன் மூலம் தமது வீட்டில் நன்மைகள் விளையும் என நம்பினார்கள். ஆகவே தமது வீட்டு சுவற்றில் சில குறிப்பிட்ட சின்னங்களை வரைந்து வைத்தோ அல்லது அந்த சின்னங்களைப் போன்ற பொருட்களை வைத்தோ அதன் முன் ஒரு எண்ணை விளக்கு ஏற்றி வைத்து, பூ மாலைகளை சூட்டி தினமும் வணங்கித் துதித்தார்கள்.

இவற்றைத் தவிர அவரவர் வீடுகளின் வாயிலில் பசு சாணம் தெளித்து காயவைத்த தரையில் ஸ்வஸ்திக், வட்ட வடிவங்களின் நடுவில் பொட்டு போன்றவற்றை வரைந்து வைத்து அவற்றுக்கு மஞ்சள் குங்குமம் பூசி வைத்தார்கள். பசுவின் சாணம் தெய்வீகம் மிக்கது, மஞ்சளும், குங்குமமும் ஆண் மற்றும் பெண்களின் சக்திகளைக் கொண்டவை. வீடுகளில் வரையப்பட்டுள்ள குறிப்பிட்ட சின்னங்கள் ஆண் மற்றும் பெண்களின் யந்திரங்கள் என்றும் அதில் அந்த தெய்வங்களின் சக்தி அடங்கி உள்ளது, சின்னங்களின் நடுவில் உள்ள போட்டு பொட்டு சிவபெருமானின் நெற்றிக் கண்ணைப் போன்றது என்றும் பயந்து எந்த ஆவிகளும் அவற்றைத் தாண்டிச் செல்லாது என்பது கிராம மக்களின் நம்பிக்கையாக இருந்தது.

இவற்றை எல்லாம் மனதில் கொண்டு கிராம மக்கள் களிமண்ணால் ஆன சிலைகளை வடிவமைத்து அவற்றை தத்தம் கிராம எல்லையின் நுழைவிடத்தில்

வைத்து அவற்றை காவல் தெய்வமாக வணங்கத் துவங்கினார்கள். பல கிராமங்களின் நுழை வாயிலில் இன்றும் கையில் கத்தி, வாள் மற்றும் பிற ஆயுதத்தை ஏந்திய ஆண் மற்றும் பெண்களின் சிலைகள் வைக்கப்பட்டு உள்ளதைக் காண முடியும். முருகப் பெருமானுக்கு துணைவராக கடம்பன் உள்ளது போல, அம்மனுக்கு துணையாக முனீஸ்வரன் காவலில் உள்ளதைப் போல தாம் வைத்துள்ள காவல் தெய்வங்களின் சிலைகளுக்குள் குடி உள்ள நல்ல ஆத்மாக்கள் தமது கிராமத்தை பாதுகாத்து, ஊருக்குள் நுழைய முயலும் தீய ஆவிகளை விரட்டி அடித்தவண்ணம் இருக்கும் என்று கிராம மக்கள் நம்புகிறார்கள்.

பல கிராமத்துக்குள்ளும்  நுழையும்போது அவற்றின் நுழை வாயில் பகுதிகளில் களிமண்ணால் செய்யப்பட்ட உருவ சிலைகள் மட்டும் அல்லாமல் அவர்களுக்கு அருகில் ஏதாவது ஒரு மிருகமும்  பெரும்பாலும் குதிரை அல்லது வேறு ஏதாவது மிருகத்துடன் நின்று கொண்டு இருப்பதைக் காணலாம். குதிரைக்கு ஒரு விஷேச குணம் உண்டு. அவற்றுக்கு சற்று தொலைவில் நிற்கும் பேய் மற்றும் பூதங்கள் கூட தெளிவாக கண்களில் தெரியுமாம். ஆகவேதான் குதிரைக்கு முக்கியத்துவம் தந்து கிராம தெய்வங்களின் வாகனமாக அதை பல கிராமங்களிலும் வைத்து உள்ளார்கள். தூரத்தில் இருந்தே தீய ஆவிகளை அடையாளம் கண்டு கொள்ளும் கிராம தெய்வங்கள் அந்த குதிரை மீது ஏறிக் கொண்டு விரைவாக தீய ஆத்மாக்களின் அருகில் சென்று அவர்களை அடித்துத் துரத்தும் என்பது நம்பிக்கையாக உள்ளது. யார் யாரை எல்லாம் கிராம காவல் தெய்வங்களாக கருதுகிறார்கள்? காவல் தெய்வம் ஆண் அல்லது பெண்ணாக இருந்தாலும் அந்த கிராம தேவதை:-

- அந்த ஊரில் பிறந்தவர்களாக இருப்பார்கள்
- கிராம மக்களின் நலனுக்காக உழைத்தவர்களாக இருப்பார்கள்
- அநீதி மற்றும் அக்கிரமங்களை எதிர்த்து நின்றவர்களாக இருந்திருப்பார்கள்

- யுத்தங்களில் பங்கேற்று மரணம் அடைந்தோ அல்லது யாரையாவது காப்பாற்ற எண்ணி அந்த நிகழ்ச்சியில் மரணம் அடைந்து இருப்பார்கள்
- யாராவது அவர்களை வேண்டும் என்றே கொலை செய்யப்பட்டு இருப்பார்கள்

கிராம தெய்வங்களில் சிலருடைய கதைகள் சுவாரஸ்யமானவை. கிராம மக்களின் மூலம் கொலை செய்யப்பட்டு இருந்தவர்களின் ஆத்மா அங்கு உலவியவாறு இருந்து கொண்டு இயற்கை அழிவுகளான வெள்ளம், புயல் போன்றவற்றை உருவாக்கும். அல்லது நதிகளின் அணைக்கட்டுக்களை உடைத்து வெள்ளத்தை உருவாக்கும் என்பதினால் அவற்றின் சினத்தை தணிக்கும் வகையில் அவற்றை போற்றி வணங்கி வந்தால் கிராமத்துக்கு பாதுகாப்பாக அவை இருக்கும் என்பது நம்பிக்கையாக இருந்தது. இப்படியாக ஒவ்வொரு கிராம தெய்வத்தின் தோற்றத்துக்கும் வழிபாட்டுக்கும் பல கதைகள் தனித்தனியே உள்ளன.

அனைத்து கிராம தெய்வங்களின் சிலைகளும் குறிப்பிட்ட வடிவம் தரப்பட்டு அமைந்தவை அல்ல. சில கிராமங்களில் காணப்படும் தெய்வங்களின் உருவங்கள் வெறும் கற்கள் (கிராம தேவதைகளாகக் கருதி) மட்டுமே. எந்த உருவமும் கொண்டிராத அந்த கற்கள் கருங்கல் பாறைகளின் மீது வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றன. மேலும் சில கிராம தேவதைகளின் உருவங்களை பாறைகளின் மீதும் வரைந்து வைத்து உள்ளார்கள்.

அனைத்து கிராம தேவதைகளும் களிமண்ணால் செய்யப்பட்ட உருவ அமைப்பைக் கொண்டதாகவும் இருந்திடவில்லை. சில கிராமங்களில் மறைந்தவர்களின் ஆத்மாக்கள் அமர்ந்து இருந்த பாறைகளை வழிபாட்டுத் தலமாக மாற்றி அமைத்து உள்ளார்கள். பூதமோ, ஆத்மாவோ இல்லை கிராம தேவதையோ, எதுவாக இருந்தாலும் சரி அவர்களது உருவங்களாக செய்து வைக்கப்பட்டு வழிபடப்படும் சிலைகள் அல்லது பாறைகள் என அனைத்திலும்

அவர்களது ஆவிகள் குடி கொண்டு இருக்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது என்பதினால் களிமண்ணால் செய்து வைக்கப்பட்ட சிலையானாலும் சரி, வெறும் கல்லாக இருந்தாலும் சரி, வழிபடப்படும் கிராம தெய்வங்களின் சிலைகளுக்கு மஞ்சள் பூசி குங்குமம் இட்டு ஆராதிக்கிறார்கள். மலர் மாலைகளை சூட்டி வணங்குகிறார்கள்.

இன்னும் சிலர் கிராம தேவதைகள் மற்றும் ஆவிகளை மேலுலகில் உள்ள கடவுட்களே தமது கிராமங்களை பாதுகாக்க தம் சார்ப்பில் தமது தூதர்களாக அனுப்பி உள்ளார்கள் என்றும் அவற்றுக்கு குறிப்பிட்ட சக்திகள் இருக்கும் எனவும் நம்புகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஆவிகளையும், கிராம தெய்வங்களையும் ஆராதனை செய்வதின் மூலம் தமக்கும் தம்முடைய கிராமத்துக்கும் வரவுள்ள தீமைகளை முன் கூட்டியே அவை தெரிவிக்கும் என்றும் நம்பி அவற்றை வணங்கித் துதித்தார்கள். அது மட்டும் அல்ல கிராமத்தினர் அவ்வப்போது சாமியாடிகள் மூலம் ஆவிகளுடன் தொடர்பு கொண்டு பேச முயலுவார்கள். அப்படிப்பட்ட நிகழ்வுகள் இடத்துக்கு இடம் மாறுபட்டு இருக்கும்.

கிராம தெய்வங்களுக்கு செய்யப்படும் வழிபாட்டு முறைகள் ஆகம முறைகளில் அமைந்தவை அல்ல. கிராம தேவதைகளின் திருவிழாவின்போது அங்கு வினோதமான நிகழ்ச்சிகள் நடைபெறும். அந்த கூட்டத்தில் உள்ளவர்களில் யார் உடலிலாவது கிராம தெய்வம் அல்லது அதன் ஆவி புகுந்து கொள்ள அவர்கள் தன்னை மறந்த நிலையில் ஆடிப் பாடத் துவங்குவார்கள். அந்த நேரத்தில் அதற்கு முன்னர் அவர்கள் பார்த்திராத, முன்பின் பழகி இல்லாத சிலரது அந்தரங்க வாழ்க்கைகளையும் வெளிப்படுத்துவார்கள். ஊருக்கு வரவுள்ள தீமைகளை முன்கூட்டியே கூறுவார்கள். ஆகவே அங்குள்ள கிராமத்தினர் அந்த சாமியாடிகள் உடலில் அங்குள்ள கிராம தெய்வமே புகுந்து கொண்டு அனைத்தையும் கூறுவதாகவும், இல்லை எனில் முன்பின் பார்த்திராதவர்களின் அந்தரங்க வாழ்க்கைக் குறித்து அவர்களால் எப்படிக் கூற முடியும் எனவும் வியந்து கிராம தேவதை மீது மேலும் நம்பிக்கை கொள்கிறார்கள்.

காதைப் பிளக்கும் சப்தங்களுடன் மேளக் கச்சேரியினர் அடிக்கும் மேள சப்தத்தில் சாமியாடிகள் நடனத்தில் தாம் கூற வேண்டிய வெளித் தெரியாத உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியபின் சிறிது நேரம் தன்னை மறந்த நிலையில் ஆடிக்கொண்டு இருந்து விட்டு அப்படியே விழுந்து விடுவார்கள். அவர்களது உடலில் புகுந்திருந்த ஆவியும் வெளியேறி விடுமாம். அங்கு கூடி உள்ளவர்கள் ஒருவித பயம் கலந்த நிலையில் அமர்ந்திருப்பார்கள். அதே சமயத்தில் இன்னொரு பக்கம் பூஜைகளும் தொடர்ந்து கொண்டு இருக்கும்.

கர்னாடகா, தமிழகம் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற இடங்களில் உள்ள கிராமத்தினர் தமது குடும்பத்தினர் நலனுக்காக ஏதாவது ஒரு கிராம தேவதைக்கு வினோதமான முறையில் ஆராதனைகள் செய்து வழிபடுவார்கள். ஆராதனையின் முடிவில் அந்த தெய்வங்களை திருப்திப்படுத்த மிருக பலிகளும் தரப்படும். அந்த மிருகங்களின் தலையை வெட்டி, அதில் இருந்து கொட்டும் ரத்தத்தை அங்கு வைக்கப்பட்டு உள்ள குடத்தில் கொட்டியோ அல்லது படையலில் கலந்தோ அதை பிரசாதமாகத் தருவார்கள்.

கர்னாடகாவில் கங்கே மாதா எனும் பிரிவினர் தமது முகத்தில் விஷேசமான முகமூடிகளை அணிந்து கொண்டும், இடுப்பில் வேப்பிலை மாலைகளை கட்டிக் கொண்டும் ரத்தக் காட்டேஸ்வரி மற்றும் மரியம்மா (மாரி அம்மன் அல்ல) போன்ற கிராம தெய்வங்களுக்கு முன்னால் நடனம் ஆடுவார்கள். அதில் தீய மற்றும் நல்ல ஆவிகளின் பாவங்களைக் காட்டும் விதத்தில் சிரிக்கும் மற்றும் பயங்கர முகத்தைக் காட்டும் வகையில் முகமூடிகளை மாற்றி வைத்துக் கொண்டே இருப்பார்கள். சில சமயங்களில் அந்த திருவிழா துவங்கும் முன்னால் பூதகணங்களை மகிழ்வூட்டும் வகையில் மிருக பலியும் தந்து ரத்தத்தை ஊற்றுவார்கள். கர்னாடகாவின் துளு மாவட்டத்தில் நடைபெறும் திருவிழா கேரளத்தில் காணப்படும் கிராமிய நாட்டியமான யக்ஷகானா எனும் நடனத்தை ஒத்திருக்குமாம். பொதுவாக ஜனவரி மற்றும் டிசம்பர் மாதங்களில் நடைபெறும்

அந்த திருவிழாவை பூத ஆராதனா என்பார்கள். அந்த பூத ஆராதனா எனும் நிகழ்ச்சி மங்களூரில் அதிகம் உண்டு.

பல மலைவாழ் மக்களை உள்ளடக்கிய ஒரிஸ்ஸா மற்றும் மத்தியப் பிரதேச மானிலங்களில் ஒன்பதாம் நூற்றாண்டில் பல கிராமங்களிலும் பார்வதியின் அவதார கணங்களாக கருதப்படும் மோகினி மற்றும் யோகினி எனும் பூத கணங்களின் வழிபாடு நடைபெறுகிறது. மோகினியில் அறுபத்தி நான்கு வகைகளிலான மோகினிகள் உள்ளார்கள். அவர்கள் பல்வேறு குணாதிசயங்களைக் கொண்டவர்களாக காட்சி தருவார்கள். அதில் சிலருக்கு மிருகங்களின் முகங்களும் அமைந்திருக்குமாம். இவற்றை ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டு உள்ள மோகினி ஆலயங்களில் காணலாம். மோகினி மற்றும் யோகினி எனும் பூதங்கள் இரவு நேரத்தில் அந்த ஆலயப் பகுதியின் மேல்பரப்பில் சுற்றித் திரியும் என்றும், அவை பல விசேஷ தந்திர மந்திர சக்திகளைக் கொண்டவை என்றும் மந்திர தந்திரங்களை செய்பவர்கள் நம்புகிறார்கள். அதனால் அந்த இடங்களுக்கு வருகை தரும் மந்திரவாதிகள் மந்திர சக்திகளை கொண்ட மோகினி மற்றும் யோகினிகளை வணங்கித் துதித்து அவற்றிடம் இருந்து மந்திர சக்திகளை பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அந்த கிராமத்து மக்களோ அந்த யோகினிகளும், மோகினிகளும் தமது கிராமங்களை பாதுகாக்க வந்த கிராம தேவதை என நம்புகிறார்கள். அவற்றுக்கு சிலை வைத்து கிராம தேவதையாக வழிபடுகிறார்களாம். இதே போன்ற நிலை தமிழ் நாடு, ஆந்திரா மற்றும் சிரிலங்காவின் சில பகுதிகளில் காணப்படுகிறதாம்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை ஐயனார், கருப்பசாமி, குதிரை வீரன், காட்டேரி அம்மன், பேச்சியம்மன், எல்லையம்மன், அக்னி வீரபத்திரர், கருப்பாயி அம்மன், சங்கிலிக் கருப்பு, மெய்யாண்டி அம்மன், நாகப்பசாமி, சன்னாசி, பச்சை அம்மன், சப்பாணி, சோனை, லாட சன்யாசி, சப்பாணி கருப்பன், சங்கிலிக் கருப்பன், சின்னக் கருப்பன், இடும்பன், வீரபத்திரன், பைரவர், சுடலை மாடன்

போன்றவர்கள் பல கிராமங்களிலும் கிராம தெய்வங்களாக வழிபடப்படுகிறார்கள். அந்தந்த கிராமங்களில் உள்ள கலாச்சாரம் மற்றும் ஜாதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஊரிலும் உள்ள கிராம தேவதைகளின் பெயர்கள் அமைந்துள்ளன.

வடநாட்டைப் பொருத்தவரை பீகார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா போன்ற மானிலங்களைத் தவிர பல இடங்களிலும் உள்ள கிராமங்களில் கிராம தேவதை வழிபாடு உள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் பல கிராமங்களின் நுழை வாயில்களிலும் சிவபெருமானின் கழுத்தில் உள்ள பாம்பு, மோகினி, யோகினி, காளி மற்றும் பைரவர் போன்றவர்களின் வடிவமைப்புக்கள் உள்ளடக்கிய சிறு வழிபாட்டுத் தலம் அமைந்துள்ளது. அவற்றில் சில உருவங்கள் பாதி உருவ அமைப்புடனோ, வெறும் கல்லாகவோ உள்ளது என்றாலும் சில இடங்களில் அந்தந்த தெய்வங்களின் முகம் மட்டுமே வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. இவர்களைத் தவிர அதிக கிராமங்களில் பகவான் ஆஞ்சனேயர் கிராம தெய்வமாக வழிபடப்படுகிறார். அதனால்தான் அநேகமாக அனைத்து கிராமங்களிலும் பகவான் ஆஞ்சனேயர் வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளன. பகவான் ஆஞ்சனேயரின் உருவமற்ற கற்கள் காவிக் வண்ணம் பூசி வைக்கப்பட்டு ஆஞ்சனேயராக கருதி வணங்கப்படுகின்றன. அந்த உருவ சிலைகள் மற்றும் கற்களில் பகவான் ஆஞ்சனேயரின் கணங்கள் அமர்ந்து இருந்து கிராமங்களைப் பாதுகாத்து வருவதாக மக்கள் நம்புகிறார்கள்.

Read further in: https://santhipriya.com/2015/08/கிராம-தேவதை-மற்றும்-பூத-வ.html



# Souls worship and Village Deities

## Santhipriya

The worship of Village Deities, unknown Souls, and Ghosts (which are evil souls released by the dead) is widely prevalent in many parts in Indian Villages and is practiced for generations. Their worship is meant to appease angry Gods and Souls whom they fear may turn inimical if they were disrespected, and cause unbearable misery by spreading dreadful diseases and other family disputes including unnatural deaths. The belief is more widespread in the villages where the tribes (not nomadic, but even including fairly educated amongst them) belonging

to several sects live together as one community, and are either engaged in the agricultural activities or other artisan work. Such belief is not confined to Indian continent alone but are also prevalent in villages across the world, especially in some of the African countries. Even after centuries and awareness programs, this practice continues to be prevalent in many villages across India.

In the past, people believed that the unknown Spirits and Souls visited their villages because:-

- that they may have belonged to those places they visited
- met both natural or unnatural death while dwelling there
- some the family members dear or inimical to them stayed there
- The Souls which had met death due to deceit of some members, visit there to take revenge on those responsible for their (soul) unnatural and immature death.
- reading several Puranas, one is inclined to believe that the Souls of the ancestors who demised, turn into wandering Souls till they get rebirth and such Souls visit the places where their families dwelled in order to not only protect them but also to satiate their hunger till they (souls) get rebirth.

The general belief of the villagers have been that the pious Souls stayed in their villages as Guardian Deity to protect the community and the village from attacks of not only other evil Souls and Spirits, but also protect the villages from natural calamities like flood, breaches in rivers, storm etc. The community feared that if such pious Souls were disrespected they may in act of vengeance and spread dreadful diseases and disasters culminating to misery and will remain mute

spectator against natural disasters. The community therefore treated the unknown souls as Guardian angels (Souls), Village Deity or Village God and worshiped them. The evil Souls which wander as Ghosts for the sins committed, if attempt to enter the villages, they would be driven off by the Guardian Deity of the villages, the community believed. This formed the reason for establishing and worshiping Village Deity or Village God in the Villages.

In respect of the sinner or evil Ghosts, the belief stemmed from many of the Puranas which state that so and so would happen against so and so sins and advised redemption exercises like sacrifices in many forms of penance to please certain Deities to get rid of the sins. As per Vedic rules, the sinners were born as Rakshasas, Asuras, Evil souls or Ghosts according to the intensity of the crime and wander in jungles in thirst and hunger. The souls wandering so move over into some Villages and stay there threatening people. Such stories propagated systematically through word of mouth for generations to infuse fear in the minds of people which led to the erection of statues to the unknown Souls called Angels, sinner Souls to safeguard themselves from the attack of unnatural. Therefore they resorted to the practice of:

- worship of Souls in the form of village Deities or Ghosts
- convert and worship specific spots in their dwellings where the departed souls had rested on mile stones, grain heaps, tree shades etc
- annual or regular worship at fixed intervals to the Souls and Village Deities

Thus the communities in the Villages installed terracotta statues in various forms including male or female or animal hoping that the savior Souls of the village

would reside inside those statues. While in community level, the Village Gods or Village Deities were installed and worshiped, on personal level many villagers believed that some of their demised family members may be wandering as Souls and they need to be respected to get their blessings to bring happiness and prosperity to the family. Therefore they worshipped them in the form of a Stone or some geometrically designed art painted on walls inside their home, and worshiped them regularly with lighted oil lamp. They feared that displeasing the Souls of the dead ancestors would cause incurable diseases and malady in their family. Therefore appeasing the ancestral Spirits in some form became part of their life.

Besides above practices, the entrances of their homes used to be sprinkled with Cow dung mixed water on which symbols like Swastika, Lines with a Dot in center were drawn with Vermillion and Turmeric powder or paste in belief that the Evil souls would not dare to enter the houses walking over the divine Cow dung or the divinely symbols for fear of getting annihilated the by the deities residing in Cow dung, Vermilion and Turmeric powders and or in the designs drawn as they were in a way considered to be part of powerful divine Yanthra of Deities to guard home. For example the two circles with center dot represent the third eye of Lord Siva. The Swastika and circles with dot inside is power of the female Deity. These were general beliefs in Villages.

With the above background in mind, the Village community installed huge terracotta statues in the entrances at the dwellings, Village entry points etc treating them as Village Deity or Guardian God. In some of the village entrances

one could see big statues of male or female figures some of them carrying Swords, Sickle and Sparrow or child in hand etc. People believed that they would guard the villages like Kadamba (an Asura turned to lord's servant) who was guardian deity of Lord Muruga, and Muneeswaran, guardian deity for Amman (Female deity emanated from Parvathi, Lord Siva's spouse) etc. It is widely believed that the Village Deities, at the entrance of the villages or in remote places of the Village would ensure that no Evils would dare to enter into the village and if and when they attempt to enter they would be driven back by the Deities, God or Souls entrenched there as Village Guard.

As one visit several interior Villages, one would also find huge statues of terracotta figures, with or without some animals standing by their side, all painted in variety of colors. Some of the Deities represented ichnographically were in threatening posture carrying weapons (club, sword, cleaver, and whip) in both hands with a big horse or animal standing by their side. Horse by nature has sensory power on the wandering Spirits and Ghosts and therefore the Village Deities had with them Horses as carrier vehicles to reach the dwellings of Spirits and Ghosts to destroy them. Thus goes the belief. Who were village deities?

- souls of someone who died in the Village
- those fought for the Villagers cause
- those who stood against tyranny and died subsequently
- those killed in war or while saving their community members or
- those done to death in acts of deceit

The story behind some of the Village Deities were that they had turned into wandering souls after being killed in act of deceit and in retaliation those Souls attempt to disturb harmony and peace, wreck damages in several forms by bringing storms, breaches in the river, contaminate water etc to the village where they were slain. Therefore in an act of atonement or to appease them, their statues were installed as Village God or Deity and worshiped. Most of them had some interesting story behind them before being accepted as Village Deity. It is also interesting to note that the life and stories of those dead both male and female and configured into the terracotta statues and that of the Souls and Spirits worshiped as Village Deity or Village Gods are many.

Usually the Village Deities in all the Villages are not be found in some form, some would be even simple stones without any image scribes or chiseled and kept on raised platforms or stone pillars either as formless structure or with some images too. They are also generally located at the outskirts of the villages. At some places the images of the Deities painted on the pillar can also be seen.

Not that huge sized terracotta statues were only installed, even some Mile Stones on which the dead or the so called Spirits or Souls normally sat became the rallying point for worship. Those Mile Stones were treated as Spirits or Souls of the Village Deity and some space around it converted into place of worship. Whichever is considered as Village Deity, the Mile Stone or the Terracotta statues, they used to be applied with turmeric and vermilion powders followed by daily garlanding with fresh flowers and worship that pleased the Souls believed to be residing within them so claim the Villagers.

There is also perception that some of the souls are none but Bhootha Ganas (angels) sent by God themselves as their agent angels, in difference to the prayers of the people to protect them and to guard their villages. The villagers attempt to live in harmony with those Spirits and offer them periodic oblation which the Angels would accept and in turn, the villagers believe, the Spirits and Souls guard them in all aspects including their dwellings and fore warn them on impending dangers and calamities to their Villages. The Villages attempt to talk to the Village Gods through some medium during the annual or periodical festivals conducted to please the Village Deities or Souls.

The Pujas performed for the Village Deities are quite different from Agama way of worship and the one performed in the regular temples. During the festival, one can see strange scenes happening. Supposedly possessed by Spirits and Souls, someone from the crowd suddenly go into trance, talk loudly or laugh and dance in ecstasy claiming to be so and so Deity or Soul. Dancing in ecstasy, the Soul influenced person in trance gave the villagers guidance, warn about the impending dangers. The people on spot respect those who go into trance as they were able to reveal hidden secrets of the persons some of whom they may not have even met before or known nor talked to.

The dance in trance continues for few hours at one stretch loudly calling names, acts, impending peril etc without showing any signs of tiredness or weakness and the trance influenced person gets back to their original form after performing the act and fell tired. Such incidents are quite common in the village festivals in the midst of ear puncturing sound of beating of drums and other instruments which

generate sense of fear in the minds of those assembled. The night long ceremonies conducted in a well-organized manner with all pomp and festivity in a well decorated arena gives the appearance of a ritualistic stage. While the image of the deity and other objects of worship continue on one side, the disciplined devotees sit on the other side watching the tranced dancers.

In parts of three states like Karnataka, Tamilnadu, Madhya Pradesh, rituals to the worship of the village Deities, Souls and Spirits are performed in awesome spectacle and strange fashion to safeguard the families and self. However most of the festivals end up with animal sacrifices and blood sucking by the ritual performing pundit. Hundreds of animals used to be sacrificed by cutting their heads and pouring the blood from the severed heads on to a fixed place or in pots kept for the purpose which used to be mixed with rice or food and served as Prasad of the deity.

In the state of Karnataka, a tribal sect called Ganged Matha, cover their faces with special masks, carry large bunch of neem leaves and dance to please the village deities like Rakthakateswari and Mariamma (not Mari Amman). The ritual dance is very artistic. Different colors of masks to symbolically display the characteristic features of the good and bad Spirits are used. Sometimes the ritual begins by performing animal sacrifices and offering blood to appease the Bhoothas called the deity. The performer will then dance to a special music which will be spine chilling. Such practices are more prevalent in the region of Thulu, which is predominantly tribal based. Since the place is near Kerala Coast, their art resembles with the Keralian art and folk dance Yakshagana. Kerala appears to have

more tantric rituals. In the city of Mangalore too the performance of Bhootha Aradhane (worship of bhootha ganas) is prevalent. Generally such festivals are held in Jan- Dec every year.

In the 9th century, in the states of Orissa and Madhya Pradesh, the interior parts of many areas being tribal, the worship of Mohinis and Yoginis, known for mysticism were highly prevalent. Others believed that the Spirits, Ghosts, or Demons are guardian deities for Goddess Parvathi. The Mohinis reflected sixty four moods of life. Some of the faces of the Mohinis were like that of the animals. The temples built in the 9th and 10th centuries for Mohinis stand testimony to the art. Even now the tantric visit the temple in belief that the Mohinis and Yogis stroll in the skies above the temple during mid night in invisible form and if they are appeased they grant them mystic and tantric powers to perform certain rituals. A majority however believe that Mohinis and the Yogis were Angels and Spirits sent to protect their villages and they are worshiped as Village Deities or Village Gods .Such belief exists in some interior parts of Tamil Nadu, Sri Lanka and Andhra too.

In Tamil Nadu, the village Deities like Aiyanar, Kithira Veeran, Karuppaswamy, Kateri Amman, Pachaiyamman, Ellaiamman, Agni Veera Badrar, Karuppayee Amman, Sangili Karuppu, Meyyandi Amman, Nagappasamy, Sannasi, Pechiamman, Sappani, Sonai, Lada Sannasi, Chappani Karuppan , Sangili Karuppan. Chinna karuppan, Idumban, Veerabadhran, Bairavan and Sudalai Madan are worshiped in different as Guardian Deities. Based on the caste and tradition to which one belonged, the Deity in the villages has assumed such names.

In the north Indian States, the concept of Village Deities are mostly unknown except in parts of Bihar, Madhya Pradesh and Orissa where the tribal are concentrated who worship some form of Village Deities. Otherwise in general, Lord Shiva's Ganas and Snakes, Mohinis, Yogins, Kali, and Lord Bhairava are kept in the village entrances or in the first reachable temples to stand guard to their villages. Some of the statues used to be in half body, some have only the face of some Deity or simple Stone that were worshiped. They believe that the Deities stand guard to their area. Apart from it they also believe that Lord Anjaneya is the Guardian Deity. May be this belief has been the reason to find temple with Lord Anjaneya installed in the form of a simple stone painted in orange colour. The temple used to be the place where Lord Anjaneya resides to guard the Village from attacks of evils.

Read further in: https://santhipriya.com/2015/08/village-deities-…-worship-english.html